Minimum Educational Qualification for the Elementary School Teachers.

*121 *Q*.—THIRU K. S. GANAPATHY (on behalf of THIRU S. MUTHUSWAMY) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to prescribe secondary grade as the minimum educational qualification for the Elementary School Teachers, as recommended in the report of the Kothari Commission on Education ; and

(*b*) if so, the date on which it will be given effect to ?

தொடக்கப் பள்ளி ஆசிரியரின் குறைந்த கல்வித் தகுதி.

திரு. கே. எஸ். கணபதி (திரு. செ. முத்துசாமி சார்பில்) : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) கோதாரிக் கல்விக் கமிஷன் அறிக்கையில் கூறப்பட்டுள்ளபடி தொடக்கப் பள்ளி ஆசிரியரின் குறைந்த கல்வித் தகுதியை செகண்டரி கிரேடு ஆக வைக்க, அரசின் பரிசீலனையில் திட்டம் உள்ளதா?

(இ) ஆமெனில், எப்போது அமுலாகும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

State Federation of the Tamil Nadu Elementary School Teachers.

*122 *Q*.—THIRU K. S. GANAPATHY (on behalf of THIRU S. MUTHUSWAMY) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether there is any proposal to sanction any amount for the establishment expenses of the State Federation of the Tamil Nadu Elementary School Teachers annually from the State Funds, as in the case of the State N.G.G.O's Association ?

தமிழ் நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாநில அமைப்பு.

திரு. கே. எஸ். கணபதி (திரு. செ. முத்துசாமி சார்பில்) : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

என். ஜி. ஓ. இயக்கத்தின் மாநில அமைப்புக்கு, அலுவலக நடைமுறைச் செலவுக்காக ஆண்டுதோறும் அரசு நிதியிலிருந்து

வழங்கும் தொகையைப் போல், தமிழ் நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாநில அமைப்புக்கு அலுவலக நடைமுறைச் செலவுக்குத் தொகை வழங்க திட்டம் ஏதேனும் உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

Boys' Clubs.

***123 Q.—THIRU L. BALARAMAN (on behalf of THIRU V. ISVAR MURTI) : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state the work done by the Boys' Clubs in the State attached to het Police Department ?**

சிறுவர் கழகங்கள் (Boys' Clubs).

திரு. எல். பலராமன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்;—

இம் மாநிலத்தில் காவல் துறையுடன் இணைந்துள்ள சிறுவர் கழகங் கள்ரல் (Boys' Clubs) ஆற்றப்படும் பணி யாது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : குற்றங்கள் மலிந்த பகுதிகளிலும், குடிசைப் பகுதிகளிலும் வளர்ந்துவரும் குழந்தைகளின் உள்ளத்தில் நல்ல குடிமகன் என்ற உணர்வை உருவாக்குவதும் சட்டத்தை மதித்து நடக்க வேண்டும் என்ற எண்ணத்தை அவர் களுக்கு ஊட்டுவதுமே சிறுவர் சங்கங்களின் முக்கிய நோக்கமாகும்.

நகர்ப்புற குடிசைப் பகுதிகளில் வாழ்க்கை நலனும் வசதியும் இன்றி வாழும் குழந்தைகளின் பயனுக்காக இச்சங்கங்கள் மனமகிழ் இடங்களாக இருக்க வேண்டுமென்ற நோக்கத்துடனேயே காவலர் சிறுவர் கழகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த நோக்கத்தைக் கருத்திற்கொண்டு, சிறுவர்கள் ஓய்வு நேரத்தில் பயனுள்ள நட வடிக்கைகளில் ஈடுபட வேண்டி கேளிக்கை, கல்வி வசதிகள் உள்ளன ; படிப்பதற்குப் புத்தகங்கள் இருக்கின்றன. கலை நிகழ்ச்சிகள் நடத் தவும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் முறையான மேற்பார்வையின் கீழ் நடைபெறுகின்றன. இச்சங்கத்தின் கண் சிறுவர்கள் ஆர்வத்தை வளர்க்கும் பொருட்டு அவர்களுக்கு திரைப்படங்கள் காட்டவும், முக்கியமான இடங்களுக்குச் சுற்றுலாச் செல்லவும் இசை நிகழ்ச்சிகள், பலவகை கேளிக்கை நிகழ்ச்சிகள் நடத்தவும் ஏற்பாடு செய்யப்படுகிறது. இவை தவிர இயன்ற அளவுக்கு இவர்களுக்குச் சிற்றுண்டியும் வழங்கப்படுகின்றது.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, இதுபோன்ற சங்கங்கள் மாவட்ட வாரியாக எந்தெந்த மாவட்டங்களில் இயங்கிக் கொண்டிருக் கின்றன, அதில் எவ்வளவு மாணவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.